**இலங்கை ஹுதபிம அதிகாரசபை (இலங்கை பசுமை குடியிருப்பு நில அபிவிருத்தி அதிகாரசபை)-2023**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஹுதபிம அதிகாரசபையின் (இலங்கை பசுமை குடியிருப்பு நில அபிவிருத்தி மத்திய அதிகாரசபையின்) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும்

அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்விற்கு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள்களும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது

தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபை செயற்படுகின்றதாஎனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பாக இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 76 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 8,575,612 ஆன வியாபாரம் மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் நடைமுறை அல்லாச் சொத்துக்கள் கீழும் நடைமுறை அல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 2,575,655 ஆன இடர் மற்றும் விசேட கடன் மீதி மற்றும் ரூபா 442,225 ஆன | கால வரையறை கணிக்கும் போது ஆண்டொன்றிற்கு மேலாக இருப்பதனால் நடைமுறை அல்லாச் சொத்துக்களாக நிதிக்கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளது. | பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொலைப்பேசி கடன் மீதியொன்று நடைமுறை சொத்தின் கீழும் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 80 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 15,218,592 ஆன நடைமுறை வடிவிலான 08 பொறுப்பு மீதிகள் நடைமுறை அல்லாத பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | அனைத்து வியாபார செலுத்த வேண்டியவைகளும் 2014 ஆண்டு தொடக்கம் நிலவி வருகின்றமையினால் கால வரையறை கணிக்கும் போது ஆண்டொன்றிற்கு மேலானது என்பதனால் நடைமுறை அல்லா பொறுப்பாக நிதிக்கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளது. | பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 5,748,638 ஆன தேய்வு மீளாய்வாண்டில் சீர் செய்யப்படும் போது அரச வழங்கல் கணக்கிற்கு வரவு வைக்கப்படாது ஒருங்கிணைந்த இலாப கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் இறுதி கணக்கின் ஊடாக சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கிடப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இருப்பு பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3906 விவசாயம் சார்ந்த உள்ளீட்டு அலகுகளின் கூட்டுத்தொகை ரூபா 7,091,310 ஆக காணப்பட்ட போதிலும், அது ரூபா 9,037,729 என கணக்கிடப்பட்டமையினால் ரூபா 1,940,419 அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் இறுதி கணக்கின் ஊடாக சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கிடப்படுதல் வேண்டும். |
| (இ) | அதிகார சபைக்கு சொந்தமான பல்லேகெலே பண்ணையில் கோழி வளர்ப்பு மற்றும் உள்நாட்டு பயிர்செய்கை தொடர்பாக சென்ரல் எஞ்சினியரிங் சேர்விஸஸ் (பிறைவட்) நிறுவகத்துடன் (CESL) உடன்பாட்டு ஒப்பந்தமொன்றிற்கு எழுந்திருந்ததுடன், அதன் கணக்கு மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுமெனவும் | 2024 ஆம் ஆண்டில் சரியான மற்றும் முறையான உடன்படிக்கை பிரகாரம் ஒருங்கிணைந்த கணக்கு வைத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் இலாபத்தினை இணங்கண்டு கணக்கிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறப்படுகின்ற இலாபம் உடன்பாட்டின் அடிப்படையில் பகிர்ந்துக் கொள்வதற்கும் ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டிருந்த போதிலும், குறித்த தனியார் நிறுவகம் கொள்வனவு செய்திருந்த ரூபா 3,237,000 ஆன 1245 சேவல்கள் மற்றும் தாய்க்கோழிகள் அதிகாரசபையின் பெறுவனவாக வருமானம் மற்றும் நிலையான சொத்துக்கள் கீழும் ரூபா 348,597 ஆன களஞ்சியப் பொருட்கள் இருப்பின் கீழும் கணக்கிடப்பட்டிருந்தது. அவ்வாறே இதன் இலாபம் இரு நிறுவனங்கள் இடையே உடன்பாட்டின் அடிப்படையில் பகிரப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான உடன்பாடு இன்றி கணிக்கப்பட்டிருந்த ரூபா 507,274 ஆன மொத்த இலாபமும் அதிகார சபையின் இலாபமாக கருதப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு முட்டை அடைக்காக்கும் கருவியினுள் (Incubators) காணப்பட்ட ரூபா 176,680 பெறுமதியான 3498 முட்டைகள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் சரியாக கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கிடப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதிக்கு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 2,096,724 ஆன 08 கணக்கு மீதிகளுக்கு தொடர்புடைய அட்டவணைகள், மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள், பதிவேடுகள் மற்றும் கோப்புகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணத்தினால் கணக்காய்வின் போது வினைத்திறனாக உறுதிசெய்ய முடியவில்லை. | அதிகார சபையின் ஆரம்பத்திலிருந்து நிலவி வரும் மீதிகளாவதுடன் அவை தொடர்ந்தும் சரியாக இனங்காணப்படவில்லை. | பதிவேடுகள், அட்டவணைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 6,860,506 ஆன பெற வேண்டிய 07 மீதிகள் 02 தொடக்கம் 42 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு கடிதங்கள் அனுப்பிய போதிலும் அதற்கான சரியான பதில் இன்னுமாக கிடைக்கப்பெறவில்லை. | பெறவேண்டிய பணத்தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 381 ஆம் நிதி பிரகாரம் பிரகாரம் திறைச்சேரியின் அங்கீகாரம் பெறப்படாது வராபடிய விற்பனை மத்திய நிலையத்திற்காக நடைமுறை கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 57,991,050 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த ஆண்டின் நிதி விளைவு ரூபா 15,279,737 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 42,711,313 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வளர்ச்சிக்கு சோள வித்து வியாபாரத்தின் வருமானம் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டினுள் அரச மூலதன வழங்கல் ரூபா 185,200,000 பெறப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 12,228,197 செலவிடப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. | ஆண்டு இறுதியில் அதிக மழை நிலவிய காரணத்தினால் எதிர்பார்க்கப்பட்ட வேலைத்திட்டங்கள் | வருமானம் மற்றும் செலவீனத்தை திட்டமிட்டு முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 57,991,050 ஆக காணப்பட்டதுடன், அதில் 21 சதவீதம் அரச மூலதன ஏற்பாட்டு சேமிப்பினால் ஆனவையாகும். | செயற்படுத்துவதற்கு இயலாது போனது. | |
| (ஆ) | 2016 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியினுள் மண் பாதுகாப்பு செயற்திட்டத்திற்காக பயனாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,623,686 ஆன 341 காசோலைகள் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாமை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாது நீண்ட கால பொறுப்பொன்றாக நிதிக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது. | கொடுப்பவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தொகை ரூபா 12,704,130 ஆன காணி மற்றும் கட்டிடங்கள், மோட்டார் வாகனங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் வீட்டு பொருட்கள் மற்றும் பொறுத்துதல்கள் உட்பட விற்பனை பிரிவு 2019 பெப்ரவரி 01 ஆந் திகதி தொடக்கம் அமைச்சரவை தீர்மானமொன்றின் பிரகாரம் அதிகார சபையின் கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்துடன் வரையறுக்கப்பட்ட ஹதபிம கூட்டுறவு சங்கத்திற்கு கையளிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதிகார சபையின் கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது சொத்துக்கள் கையளிக்கப்பட்டிருந்தது. | கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் இது தொடர்பில் பல வழக்குகள் பரீட்சிக்கப்பட்டு வருகின்றதுடன் இது தொடர்பில் அதிகார சபையினால் தலையீடு செய்ய முடியாது. | முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் சொத்துக்கள் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கொத்மலையிலுள்ள 05 ஹேக்கர் பணிர்சய்கை நிலம் அதிகார சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | அது தொடர்பில் கமத்தொழில் அமைச்சருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பயிர்செய்கை நிலத்தினை கையேற்பதற்கு நடவடிக்க எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 நோக்க செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீர் வளங்கள் மற்றும் நீர்நிலைப் பாதுகாப்பு வேலைத் திட்டத்தின் கீழ் எஹெலியகொடை பிரதேசத்தின் விகாரையொன்றினால் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட குளமொன்றின், பாதுகாப்பு சுவர் நிர்மாணிப்பதற்கு ரூபா 1,046,560 ஆன தொகைக்கு விகாரையுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிடிருந்ததுடன் எந்தவொரு நிர்மாணிப்பும் இன்றி மீளாய்வாண்டின் திசெம்பர் 08 ஆந் திகதி அதற்காக ரூபா 522,780 செலுத்த்பட்டிருந்தது. | முற்பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கட்டுமாணப் பெருட்கள் வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டதென விகாரை மதகுரு எழுத்துப்பூர்வமாக தெரிவித்துள்ளார். | உரிய பணி நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | துங்தெனிய டேல் ஓடை நீர்வளம் பாதுகாப்பு செயற்திட்டத்தின் நீர் தொட்டியொன்று தாபிக்கும் நிலத்தினைச் சுற்றி 10 முற்கம்பி இழைகளைக் கொண்ட 05 அடி உயரமுள்ள வேலி தூண்கள் 80 இணைக் கொண்ட பாதுகாப்பு வேலியொன்று நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரர்களுக்கு கையளித்து 2023 திசெம்பர் 08 ஆந் திகதி ரூபா 200,000 செலுத்தப்பட்டிருந்தது. 2024 மார்ச் 8 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது மிகவும் குறைவான தரத்தில் மற்றும் மதிப்பிடப்பட்ட அளவிலும் குறைவாக 15 வேலி தூண்கள் மட்டும் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் 65 வேலி தூண்களுக்காக ரூபா 165,500 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. தரமற்ற வேலி தூண்கள் நிர்மாணிக்கப்பட்டமை காரணத்தினால் | குறித்த பணி உரிய வண்ணம் நிறைவடைந்த பின்னர் கையில் நிறுத்தி வைக்கப்பட்டவை விடுவிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய தரத்தின் பிரகாரம் பணி நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முற்கம்பிகளுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 80,058 ஆன தொகையும் விளைவற்ற செலவீனமாக காணப்பட்டதுடன் காணிக்கு வாயிற்கதவு நிர்மாணிப்பதற்காக தரமற்ற ரீதியில் நிர்மாணிக்கப்பட்ட கொங்கிரீட் தூண்கள் இரண்டிற்காக ரூபா 183,288 செலவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கொத்மலை பயர்நிலத்தில் குளம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக அதிகார சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் அல்லது வேறு சுயாதீன வெளிப்புற பொறியியலாளரொருவரின் உதவியுடன் வரைவு மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்படாது ஒப்பந்த நிறுவனத்திற்கு நிர்மாணிப்பினை கையளித்து அந் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட ரூபா 2,399,640 ஆன மதிப்பீட்டின் அடிப்படையில் ஒப்பந்தங்களுக்கு உடன்பட்டிருந்தது. வேலை விடயம் 01 மற்றும் 02 இற்கு அமைவாக மண் வெட்டுதல் மற்றும் காணியினை சுத்தப்படுத்தலுக்காக முறையே 1055 கண மீட்டர் மற்றும் 871 சதுர மீட்டருக்காக கூட்டுத்தொகை ரூபா 633,637 மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வேலை விடயம் 03 இன் கீழ் 08 கண மீட்டர் கல்லொன்றினை உடைத்து அகற்றுவதற்கு ரூபா 384,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அவ்வாறன கல்லொன்று உடைத்து அகற்றப்பட்டமை தொடர்பில் எந்தவொரு தகவலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.<br>மீளய்வாண்டு இறுதி திகதிக்கு உள்ளவாறு பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் 2024 பெப்ரவரி 22 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிராமையினால் 53 நாட்களுக்காக 53,947 ஆன தொகை தாமதக் கட்டணமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | விவசாயத் திணைக்களத்தின் சிவில் பொறியியலாளரொருவரினால் பரீட்சிக்கப்பட்டு பெற்றுக் கொடுக்கப்பட்ட பரிந்துரை மற்றும் குறித்த மதிப்பீடு பிரகாரம் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தொழில் நிபுணத்துவம் கொண்ட உத்தியோகத்தரொருவரினால் தயாரிக்கப்பட்ட வரைவு மற்றும் மதிப்பீடு பிரகாரம் நிர்மாணிப்பு கையளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பணிகளுக்காக பரிந்துரை செய்யப்பட்டு கொடுப்பனவு சய்யப்பட வேண்டியதுடன், நிறைவு செய்யப்படாத பணிகளுக்காக கொடுப்பனவு மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பல்லேகெலே பயிர் நிலத்தின் நீர்தேக்கத்தினை மறுசீரமைக்கும் செயற்திட்டம் ரூபா 5,751,630 ஆன தொகைக்கு ஒப்பந்த நிறுவனத்திற்கு நிர்மாணிப்பு கையளிக்கப்பட்டு திகதியொன்று இன்றி ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.<br>அதிகார சபைக்காக அதிகார சபைக்கு சொந்தமற்ற வெளிகள பொறியியலாளரொருவரின் பெயரினை பயன்படுத்தி ஒப்ந்தக்காரருடன் உடன்படப்பட்டிருந்தது.<br>நிர்மாணிப்பு தளத்தில் மண் அகற்றுவதற்கு 1727 கண மீட்டருக்காக ரூபா 1,770,641 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் கால்வாய் மற்றும் மதகு நிர்மாணிப்பின் போது வானே கம்பிக்காக ரூபா 22,943 மேலதிமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.<br>ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்திட்டமானது 2023 திசெம்பர் 30 ஆந் திகதி பணிகளை நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் 2024 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதனால் 61 நாட்களுக்காக ரூபா 171,145 தாமதக் கட்டணமும் கால்வாய் மற்றும் குளத்தின் அடி பகுதியில் மண் அகற்றும் போது கண மீட்டரொன்றிற்கு ரூபா 520 இற்கு பதிலாக கண மீட்டரொன்றிற்கு ரூபா 1,025 கொடுப்பனவு செய்யப்பட்டதன் காரணத்தினால் ரூபா 1,920,026 மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பொறியியலாளரொருவரின் பரீட்சிப்புக்கு உட்படுத்துவதற்கு தேவைப்பட்டதன் காரணத்தினால் குறித்த காசோலைகள் நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தம் நிறைவேற்றும் போது முறையாக உடன்பட வேண்டியதுடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>நிறைவேற்றப்படாத பணிகளுக்காக கொடுப்பனவு மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு வரம்பினை மிகைத்து 4 சதவீதம் தொடக்கம் 86 சதவீதம் வரை 05 செலவீன விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,497,502 செலவிடப்பட்டிருந்ததுடன் 07 செலவின விடயங்களின் ஒதுக்கப்பட்ட தொகையில் 26 சதவீதம் தொடக்கம் 99 சதவீதம் வரை வீச்சில் கூட்டுத்தொகை 20,980,984 ஆன நிதியேற்பாடு பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. | ஈட்டப்பட்ட செலவீனங்களை சீராக்கம் செய்வதற்கு முன்னர், ஆண்டினுள் காசினால் ஏற்கப்பட்ட செலவீனம் பாதீட்டு வரம்பினை மீறவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு வரம்பினுள் செலவினம் ஏற்கப்படல் வேண்டும். நிதியேற்பாடு திட்டமிடப்பட்ட பிரகாரம் பயன்படுத்தப்படல் வேண்டும். |